முச்சந்தி முரளி



"மணலை அள்ளுறதும் சுண்ணக்கல்லை அகழுறதுதான் சிலருக்கு முழுநேர வேலை போல"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 138

வெள்ளிக்கிழமை
12 ஏப்ரல் 2024

பங்குனி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

### தனியார் காணிக்குள் மருத்துவக்கழிவுகள்

# சட்டவிரோதமாக எரிப்பு; மக்கள் கொந்தளிப்பு!!

### ஏ-9 வீதி சிலமணிநேரம் முடக்கம்

### 7 நாள்களுக்குள் கழிவுகள் அகற்றப்படுமென உறுதிமொழி

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 12**

**அரியாலை மத்தி, நெடுங்குளம் பகுதியில் ஏ-9 வீதிக்கு அண்மையில் உள்ள காணி ஒன்றில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகள் இரகசியமாக - சட்டவிரோதமான முறையில் எரியூட்டி அழிக்கப்படுகின்றன என்றும், அதனால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளை சந்திக்க நேரிட்டுள்ளது எனவும் அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டி, வீதிமறிப்புப் போரில் நேற்றுமாலை திடீரெனக் குதித்தனர்.**

11



## ஊடகவியலாளர்களை விரட்டிய பொலிஸ்!

யாழ்ப்பாணம், ஏப்.12

சட்டவிரோதமான மருத்துவக்கழிவுகள் எரியூட்டப்பட்ட அரியாலை மத்தியில் உள்ள நெடுங்குளம் காணிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில்

11



## நாயின் உணவு ரத்தம்!

யாழ்ப்பாணம், ஏப்.12

அரியாலை மத்தி, நெடுங்குளத்தில் உள்ள யாழ்.போதனா மருத்துவமனைக் கழிவுகள் சட்டவிரோதமாக எரியூட்டப்பட்ட காணியில், வீசப்பட்டிருந்த மருத்துவக் கழிவுகளை விலங்குகள் தமது உணவாக உட்கொண்டு வருவதை அங்கு சென்ற ஊடகவியலாளர்கள் நேரடியாகக்கண்டு அதிர்ச்சியுற்றனர். அங்கு நின்றிருந்த சில நாய்கள், இரத்தப்பைகளை கடித்து, ருசித்துக் குடித்ததையும் ஊடகவியலாளர்கள் பதிவுசெய்தனர்.

(அ-20)

## காணிகளை மீட்டுத்தருக!

### கேப்பாப்பிலவு மக்கள் ஆளுநரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.12

இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள தங்களது காணிகளை மீட்டுத்தரவேண்டும் என்று முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு மக்கள் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

11

## நீர்க் குட்டையில் சடலம் மீட்பு

முல்லைத்தீவு, ஏப்.12

புதுக்குடியிருப்பு, பரந்தன் வீதியில் கைவேலிப் பிரதேசத்தில் குட்டை ஒன்றுக்குள் வீழ்ந்து வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. தேவிபுரத்தைச் சேர்ந்த முனுசாமி திருச்செல்வம் (வயது-65) என்பவரே

11

## சஜித் – அநுர விவாதம்; ரணிலும் வரவேண்டும்!

கொழும்பு, ஏப்.12

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், ஐக்கிய மக்கள் சக்தித் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான நேரடி விவாதத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பங்கேற்கவேண்டும். இல்லை என்றால் அந்த விவாதம் பூரணத்துவமாக இருக்காது - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு

11

## விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், ஏப்.12

விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். முள்ளியவளையைச்

11

## மன்னாரில் "குளிர்ச்சி"

மன்னார், ஏப்.12

மன்னாரில் நேற்றுக் கடும் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. தற்போது கடும் வெப்பமான காலநிலை நிலவி வந்த நிலையில், மன்னாரில் கடும் வறட்சி ஏற்பட்டிருந்தது.

நேற்று அங்கு குறுகிய நேரத்தில் அதிக மழைவீழ்ச்சி

11

### பொன்னாவெளி சுண்ணக்கல்லை

## ஆய்வறிக்கை கிடைத்ததும் அசுர வேகத்தில் அகழ்வேன்!

### மக்களுடன் மல்லுக்கட்டுகிறார் டக்ளஸ்

கொழும்பு, ஏப்.12

பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வதால் எந்தப் பாதிப்பும் இல்லை என்று ஆய்வறிக்கை கையில் கிடைத்தவுடன், அகழ்வுப் பணிகளுக்கான நடவடிக்கைகள் அசுர வேகத்தில் முன்னெடுக்கப்படும்.

-இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

11

## கிணற்றில் இருந்து சடலம் மீட்பு

சாவகச்சேரி, ஏப்.12

ஓய்வுநிலை ஆசிரியை ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நுணாவில் மத்தியில் நடந்

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 உணவுப்பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலை

கொழும்பு, ஏப். 12

**பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருள்களை நியாயமான விலையில் மக்கள் கொள்வனவு செய்யும் வகையில் 9 அத்தியாவசியப் பொருள்களுக்கு விலைக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.**

அதன்படி, ஒரு கிலோ கோதுமை மா 189 ரூபா முதல் 208 ரூபா வரையிலும், பருப்பு 312 ரூபா முதல் 327 ரூபா வரையிலும் விலைக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு ஒரு கிலோ 174 ரூபா முதல் 214 ரூபா வரையிலும், சீன வெங்காயம் ஒரு கிலோ 298 ரூபா முதல் 328 ரூபா வரையிலும் ஒரு கிலோ சின்ன வெங்காயம் 349 ரூபா முதல் 384 ரூபா வரையும் தாய்லாந்து உலர் நெத்தலி கிலோ ஒன்று 869 முதல் 955 ரூபா வரையிலும் காய்ந்த மிளகாய் 818 ரூபா முதல் 859 ரூபா வரையும் விற்பனை செய்யப்படவேண்டும் எனவிலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (ச-இ)



## 2015 இல் மைத்திரியை களமிறக்கியது தவறு

### வருந்துகிறார் சந்திரிகா

கொழும்பு, ஏப். 12

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனாவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கியது தான் இழைத்த மாபெரும் தவறு என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார். "இப்படிப்பட்ட அரசியல்வாதிகள் எப்போதும் தவறிழைத்துக் கொண்டே இருப்பார்கள். இவர்களைப்போன்றவர்களால் மக்கள் துன்பப்படுகின்றார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ-6)

## வெளிநாட்டுச் செல்வாக்கு; கட்டுப்படுகிறது இலங்கை!

### சீன ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 12

இலங்கை தீர்மானங்களை எடுக்கும்போது வெளிநாடுகளின் செல்வாக்குக்கு உட்படுகின்றது என்று சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்ட இலங்கைப் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுடனான கலந்துரையாடலில் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இலங்கையில் சீன நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கான வெளிப்படையான நியாயமான சூழல் அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது சீனப் பிரதமர் லீ கியாங், இலங்கை சீனாவின் ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு விதித்துள்ள தடை குறித்து அதிருப்தி வெளியிட்டார். (ச-இ)

## ஜனாதிபதித் தேர்தலில் பஸிலை களமிறக்குங்கள்

கொழும்பு, ஏப். 12

ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் பஸில் ராஜபக்ச களமிறக்கப்படவேண்டும் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் பண்டார கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, பஸில் ராஜபக்ச ஜனாதிபதியாக வேண்டும் என்பதே எனது விருப்பம். அதற்கான அனைத்து தகுதிகளும் அவருக்கு உள்ளன. அவர் இந்நாட்டில் வேலை செய்து காட்டியவர், அரச அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களிடம் பஸிலைப் பற்றி கேளுங்கள். அவர் ஜனாதிபதிப் பதவிக்கு வருவதில் உள்ள தவறு என்ன? வேலை செய்து காட்டிய தலைவருக்குப் பதவி வழங்கப்படுவதே மிகப் பொருத்தம். அதற்குத் தகுதியான நபரே பஸில் ராஜபக்ச.

அதேவேளை, நாமல் ராஜபக்ச சிறந்த இளம் தலைவர். அவர் மொட்டுக் கட்சியைப் பலப்படுத்தி விடுவார் என்ற அச்சம் காரணமாகவே நாமலுக்கு எதிராகப் பரப்புரை முன்னெடுக்கப்படுகின்றது- என்றார். (ஒ-44)

## போலி நாணயத்தாள் புழக்கம் அதிகரிப்பு

### பொலிஸார் எச்சரிக்கை

போலி நாணயத்தாள்களின் புழக்கம் அதிகரித்துள்ளது என்றும், பணத்தைக் கையாள்வதில் பொதுமக்கள் கவனமாக இருக்கவேண்டும் என்றும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

குறிப்பாக கொழும்பு உள்ளிட்ட புறநகர்ப் பகுதிகளில் போலி நாணயத்தாள்களின் புழக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. எனவே பணப்பரிவர்த்தனை செய்யும்போது பணத்தாள்களில் மாற்றம் இருந்தால் தகவல்தெரிவிக்கவேண்டும்என்றும்பிரதிப்பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவா தெரிவித்தார். (ச-இ)

## போதை விற்பனை; ஆசிரியை கைது!

கொழும்பு, ஏப். 12

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஆசிரியை உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வியங்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபரான ஆசிரியையிடமிருந்து 2 ஆயிரத்து 300 மில்லிகிராம் ஹெரோய்னும் மற்றையவரிடமிருந்து 4 ஆயிரத்து 500 மில்லிகிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## விமானப்படை ஆட்குறைப்பு

விமானப்படையில் சேவையாற்றும் 35 ஆயிரம்விமானப்படை வீரர்களின் எண்ணிக்கையை 2030 ஆம் ஆண்டளவில் 18 ஆயிரமாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விமானப்படைத்தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ச தெரிவித்துள்ளார். குறைக்கப்பட்ட விமானப்படையினரின் எண்ணிக்கைக்குப் பதிலாக தொழில்நுட்பத்தை பயன் படுத்த ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## வாக்காளர் பட்டியல் மக்கள் பார்வைக்கு

கொழும்பு, ஏப். 12

2023 ஆம் ஆண்டுக்கான தேர்தல் வாக்காளர் பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பெயர்களைக் கொண்ட 'ஏ' பட்டியலும் 2024 ஆம் ஆண்டுக்கான தேர்தல் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களின் பெயர்களைக் கொண்ட 'பி' பட்டியலும் தற்போது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பெயர்ப்பட்டியல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதிவரை மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூர் அதிகாரசபைகள், கிராம அலுவலர் அலுவலகங்கள் ஆகியவற்றில் மக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வாக்காளர் பெயர்ப்பட்டியலிலுள்ள பெயர்களை நீக்குவது, புதிதாகச் சேர்ப்பது அல்லது பெயர்கள் தொடர்பில் வேறு சந்தேகங்கள் இருப்பின் சம்பந்தப்பட்ட வாக்காளர் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் தகவல் தெரிவிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## தொலைபேசிச் சின்னத்தில் களமிறங்குகிறாரா ரணில்?

கொழும்பு, ஏப். 12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக கையடக்கத் தொலைபேசிச் சின்னத்தில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுச்சின்னம் குறித்து ஜனாதிபதி தீவிரமாகப் பரிசீலித்துவரும் நிலையில் அந்தப் பட்டியலில் கையடக்கத் தொலைபேசிச் சின்னம் முன்னிலையில் இருப்பதாக அறியமுடிகின்றது.

அமைச்சர் டிரான் அலஸின் கட்சியான ஐக்கிய மக்கள் கட்சியின் சின்னமே தொலைபேசிச் சின்னமாகும். அக்கட்சியின் ஆங்கிலப் பெயரின் சுருக்கம் (யூ.பி.பி.) என வருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் (யூ.என்.பி.) என்ற விடயத்துடன் ஓரளவு ஒத்துப்போகின்றது.

அத்துடன், நிலையான தொலைபேசி என்பது அந்தக் காலம், ஸ்மார்ட் போன் என்பதே இந்தக் காலம் எனக் கூறி, சஜித் அணிக்கு எதிராகப் பரப்புரை செய்யவும் இதனைப் பயன்படுத்தமுடியும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தச் சின்னம் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி சேகரிப்பு விவகாரம்: ஆணைக்குழு விசாரணை

யாழ்ப்பாணம், ஏப். 12

**வடமராட்சி இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபரையும் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரையும் எதிர்வரும் 24ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் முன்னிலையாகி பாடசாலையில் நிதி சேகரிப்புத் தொடர்பில் விளக்கமளிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.**

பாடசாலையின் அதிபர் உள்ளிட்ட சிலர் வட்ஸப் குழு ஒன்றின் மூலம் மாணவர்களின் பெற்றோரிடம் பணம் பெற்று வந்துள்ளனர் என்று செய்திகள் வெளியாகி இருந்தன. இதனையடுத்து பாடசாலையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டு விட்டதாக ஒரு தரப்பினர் போராட்டம் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-66)



## மரக்கறி விலை கிடுகிடு சரிவு!

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ். குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். கூடுதலான மரக்கறி வகைகள் சந்தைக்கு வந்து சேர்வதால் அவற்றின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

திருநெல்வேலி சந்தையில் நேற்றைய விலை நிலைவரத்தின்படி, கத்தரிக்காய் கிலோ 140 ரூபாவாகவும், பாகற்காய் கிலோ 200 ரூபாவாகவும், பயிற்றங்காய் கிலோ 120 ரூபாவாகவும், கோவா கிலோ 120 ரூபாவாகவும், வெண்டிக்காய் கிலோ 60 ரூபாவாகவும், பூசணிக்காய் கிலோ 120 ரூபாவாகவும் ,பச்சைமிளகாய் கிலோ 140 ரூபாவாகவும், தக்காளிப்பழம் கிலோ 120 ரூபாவாகவும், மரவள்ளிகிலோ 100 ரூபாவாகவும், கீரை ஒரு பிடி 80 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. (ச-17)

## சண்டிலிப்பாய் இளைஞன் கைது



கொழும்பு, ஏப். 12

போலிக்கடவுச்சீட்டைப் பயன்படுத்தி மலேசியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற சண்டிலிப்பாயைச் சேர்ந்த இளைஞன் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு எதிராகப் பயணத்தடை விதிக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் அவரது கடவுச்சீட்டிலுள்ள தகவல்களை மாற்றி போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மலேசியாவின் கோலாலம்பூருக்குச் செல்ல தயாராக இருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-இ)

## தேங்காய் திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், ஏப். 12

கொழும்புத்துறை மேற்கில் தேங்காய் திருடர்களின் கைவரிசை அதிகரித்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குடியிருப்புக் காணிகளிலுள்ள தென்னை மரங்களில் காணப்படும் தேங்காய்களை இரவு வேளைகளில் திருடர்கள் களவாடிச் செல்கின்றனர்.

அத்துடன் தற்போது செவ்விளநீருக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதனால் தென்னைகளில் காணப்படும் இளநீர்க் குலைகளையும் திருடர்கள் பறித்துச் செல்கின்றனர் என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-17)

## புதுவருடத்தையொட்டி பொலிஸ் கண்காணிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ். குடாநாட்டில் பொலிஸாரின் ரோந்துப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சித்திரைப் புத்தாண்டுக்கான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு யாழ். நகரில் மக்கள் அதிகமாகக் கூடுகின்ற நிலையில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

திருடர்களின் கைவரிசை மற்றும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாகக் கண்காணிப்பு நடவடிக்கைகளும் வீதிச் சோதனை நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

# இலங்கையின் இறைமை அமெரிக்கா முழு ஆதரவு

இலங்கையின் இறைமை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அமெரிக்காவின் முழுமையான ஆதரவு கிடைக்குமென ஐக்கிய அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சலிவன் உறுதியளித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவுடன் நேற்றுமுன்தினம் நடந்த தொலைபேசிக் கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பல முக்கியமான விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன. எதிர்காலத்தில் பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் வாய்ப்புகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

"பிராந்தியத்தில் சமாதானம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இலங்கையுடன் அர்ப்பணிப்பாகப் பணியாற்றுவோம்" - என்று சலிவன் குறிப்பிட்டார். (ச-இ)

## ப தினம் தெரியுமோ?

**பட்சியைக் கண்டா அப்பிடியே பச்சையா பச்சடி போட்டுச் சாப்பிடுறளவுக்கு கனபேர் வெறிபிடிச்சு அலையினம், அந்தளவுக்கு பட்சியில 'பாசம்'. முந்த நாளும் பட்சிக்கு ஒரு ரெலிபோன் கோல். பலாலி எயார்போட்டில மாலையைக் கொண்டுபோக விடாமல் மறிச்சு, கடைசியா அதைப் பிய்ச்செறிஞ்ச விசயத்தை பட்சி வெளில கொண்டந்திட்டுதெல்லோ. அதைப்பற்றி கனபேர் கண்டபடி பேச, தங்கட வேலைக்கு ஏதும் பிரச்சினை வந்திடுமோ எண்ட பயத்தில, பலாலி எயார் போட்டில இருக்கிற தாவர தனிமைப்படுத்தல் பிரிவுக்குப் பொறுப்பா இருக்கிற அம்மணி, பட்சியின்ர வாயை அடைப்பம் எண்டு கோல் எடுத்தவா.**

**"கொரோனாவுக்குப் பிறகு இப்பிடி தாவரமோ, தாவரம் சம்பந்தப்பட்ட பொருள்களோ கொண்டுவாறதெண்டால் அதுக்கு கனக்க சட்டதிட்டங்கள் இருக்கு. அவர் மாலையைக் கொண்டுவர வேணுமெண்டால் முதலே இஞ்ச அறிவிச்சு அனுமதி எடுத்துக்கொண்டு போயிருக்க வேணும். உலகம் முழுக்க இதுதான் ரூல்ஸ். உதெல்லாம் மாலையைக் கொண்டுவந்தவைக்கு தெரியாதோ? நீங்களும் ஆராயாமல் அதைப் போட்டது தவறெல்லோ" எண்டு மூச்சுவிடாமல் அந்த அம்மணி பொரிஞ்சு தள்ளினா.**

**அவா சொன்னதும் ஒருவகையில சரிதான். உலகம் முழுக்க இந்த ரூல்ஸ் இருக்குத்தான். தாவரங்களாலையோ இல்லாட்டி அதுகளின்ர விதையளாலையோ எந்தவொரு நாட்டுக்கும் புதுசா கிருமியள் ஏதும் தொத்தக் கூடாது எண்டதுக்குத்தான் உந்த ரூல்ஸ் இருக்கு. ஆனால் அந்த ரூல்ஸ் கனபேருக்குத் தெரியாது. அதாலதான் இப்பிடியேதும் விதைகள், தாவரங்கள் கொண்டந்தால் அதை செக் பண்ணி , 'இதில பாதிப்பை ஏற்படுத்திற கிருமிகள் இல்லை' எண்டு ஒரு சேர்ட்டிபிக்கெட் குடுக்கத்தான் 'தாவர தனிமைப்படுத்தல்' பிரிவு எண்ட ஒண்டு இருக்கு. பூக்களுக்கு இந்தத் தனிமைப்படுத்தல் ரூல்ஸ் பொருந்துமோ? எண்டு கேப்பியள். எல்லாப் பூக்களுக்கும் உது பொருந்தாது. ஆனால் விதையுள்ள பூக்கள், இல்லாட்டி பூக்களால பரம்பலடையிற தாவரங்களுக்கு உந்த ரூல்ஸ் பொருந்தும்.**

**சரி இப்ப விசயத்துக்கு வருவம். அண்டைக்கு இந்தியாவால வந்தவர் விதையுள்ள பூக்களையோ இல்லாட்டி பரம்பலடையக்கூடிய பூக்களையோ கொண்டு கட்டின மாலையைக் கொண்டு வரேல. அவர் கொண்டந்ததெல்லாம் மல்லிகை, ரோசாப்பூ இதுகளில கட்டின மாலை. அந்தப் பூக்களில விதையுமில்லை, அதுகள் பூவால பரவி முளைக்கிறதுமில்லை. அப்ப அந்த மாலையை அவை கொண்டு போக விட்டிருக்கலாம். அந்த விசயம் அவைக்குத் தெரியாட்டி 'பூக்களையும் தனிமைப்படுத்த வேணும்' எண்டது மட் டும் தான் அந்தப் பிரிவில நிண்டவைக்குத் தெரியுமெண் டால், மாலையைச் சோதிச்சு ,அதுக்குரிய காசை வாங் கிக் கொண்டு 'இதில கிருமி இல்லை' எண்ட சேர்ட்டி பிக்கெட்டை குடுத்துவிட்டிருக்கலாமே. அதுக்குத்தானே அந்தப்பிரிவையே எயார்போட்டில வைச்சிருக்கினம். யாழ்ப்பாணம் பெரிய போஸ்ட் ஒப்பீஸிலையும் இதே மாதிரி ஒரு தாவர தனிமைப்படுத்தல் பிரிவு இருக்கு. பலாலி எயார்போட்டில நிக்கிறவை அங்கபோய் பார்த் தாலாவது எப்பிடி இந்த விசயத்தைக் கையாளவேணும் எண்டு கொஞ்சமாவது விளங்கும்.**

**தங்கட வேலைச்சுகத்துக்காக, ரூல்ஸை அரைகுறையா விளங்கிக் கொண்டு நடக்கிறவையாலதான் சனத்துக்கு கஷ்டம். பயணக்களைப்போட வாறவையிட்ட 'அதைக் கொண்டு போகாதை இதைக்கொண்டு போகாதை' எண்டு சீறிச்சினக்காமல், 'இதைச் செய்தால் கொண்டு போகலாம்' எண்டு வழிகாட்டினால் பிரச்சினையேயில்லையே.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு விளையாட்டுவிழா

பளை ஏப். 12

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா, முகமாலை சிவபுரம் வளாகத்தில் நாளைமறுதினம் பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலக வழிகாட்டலில், மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், முகமாலை புதிய தென்றல் கலைமன்றம், புதிய தென்றல் விளையாட்டுக்கழகம் , சிகரம் சிறுவர் கழகம், ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றுடன் முகமாலை 'அன்பே சிவம்' அறக்கட்டளையின் அனுசரணையுடன் விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலக உதவி மாவட்டச் செயலர் திருமதி ஹ.சத்திய ஜீவிதாவும், சிறப்பு விருந்தினராக 'அன்பே சிவம்' அறக்கட்டளை நிறுவனத் தலைவர் கு. குமணனும் கலந்துகொள்வர். (ஒ)



## விபத்துகளை கட்டுப்படுத்துக

முல்லைத்தீவு, ஏப். 12

திருமுறிகண்டிக்கும் இரணைமடுவும் இடைப்பட்ட பகுதியில் அடிக்கடி நிகழ்கின்ற வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்குப் போக்குவரத்து பொலிஸார் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என இந்தப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

திருமுறிகண்டி, இந்துபுரம், பொன்நகர், பாரதிபுரம், கனகாம்பிகைக்குளம் ஆகிய கிராமங்களில் மக்கள் செறிவாக வாழ்கின்றமையால் ஏ-9 சாலையில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகளும் படுகாயங்களும் அதிகமாக ஏற்படுகின்றன என்றும் பொது அமைப்புகள் தெரிவித்தன. (ப-13)

புதுவருட தினத்தில்

## யாழ்.ஆலயங்களில் விசேட வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஏப். 12

'குரோதி' புதுவருடப் பிறப்பை முன்னிட்டு நாளை சனிக்கிழமை யாழ்.குடாநாட்டு ஆலயங்களில் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் நாளை சனிக்கிழமை இரவு 8.15 மணிக்கு விசேட பூசைகள் நடைபெற்று முருகப்பெருமான் வீதி வலம் வருவார்.

ஏனைய ஆலயங்களிலும் சித்திரைப் புத்தாண்டு பிறக்கும் வேளையில் சிறப்பு அபிஷேகம், பூசைகள் மற்றும் பொங்கல் வழிபாடுகள் என்பனவும் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)



## 109 ஆவது ஆண்டு குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 12

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 109 ஆவது ஆண்டு குருபூசை நிகழ்வுகள், நல்லூர் சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில், நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் இடம்பெற்றன.

தொடர்ந்து, யோகர் சுவாமிகளின் 60 ஆவது ஆண்டு குருபூசை நாளை நினைவுகூர்ந்து, யோகர் சுவாமிகளால் ஆட்கொள்ளப்பெற்ற கொக்குவிலைச் சேர்ந்த அமரர் கந்தப்பிள்ளை ஆசிரியர் எழுதிய 'உயிர்க்குயிர்க் கடவுளாகிய சிவயோக சுவாமிகள்' எனும் தலைப்பிலான நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வில் நல்லை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நல்லூர் சைவப்பிரகாசப் பேரவையின் செயலாளர் வே.சிவகுருநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-66)

## குடும்ப உறுப்பினருக்கு காப்புறுதித் தொகை

### எம்.பி.க்கள் கோரிக்கை

தமது குடும்ப உறுப்பினர்களுக்கும் காப்புறுதித் தொகையை வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் நாடாளுமன்றத் தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது வரை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே காப்பீட்டுத் தொகையைப் பெற்று வருவதோடு, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் ஆண்டுக் காப்பீட்டுத் தொகையின் மதிப்பு பத்து லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

தங்களது சம்பளத்தில் இருந்து சிறு தொகையைப் பிடித்தே, தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் காப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டியுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளால் பெருமை ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் வழக்கம் போலவே இருக்கும்.

**இடபம்:** ஆதாயம் உண்டாகும். செலவுகள் அதிகரித்தாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிடுவீர்கள். பணிச்சுமை காரணமாக உடல்அசதி உண்டாகும். தேவையற்ற விவாதங்களை தவிர்க்கவும். மன அமைதி பெறலாம்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். செலவுகள் ஏற்படக்கூடும். பிணக்குகள் நீங்கும். உறவினர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். ஆதாயம் உண்டாகும் . மகிழ்ச்சியும் உற்சாகமும் பெறுவீர்கள். விநாயகரை வழிபடுவது நன்று.

**சிம்மம்:** உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அம்பிகையை வழிபடுவது நலம் தரும். உடல் அசதி ஏற்படக்கூடும். வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும்.

**கன்னி:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மறை முகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. செலவு செய்யவேண்டி வரும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படும் நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** அனுகூலமான நாள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சங்கடங்கள் ஏற்படும். பொறுமையாக இருப்பது அவசியம். உடல் நலனில் கவனம் தேவை.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். தாயின் விருப்பத்தை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். விற்பனையும் லாபமும் அதிகரிக்கும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். மகாலட்சுமி வழி



**உடுவில் பிரதேச செயலகமும், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து நடத்திய, பிரதேச சமுர்த்தி அபிமானிக் கண்காட்சியும், விற்பனைச் சந்தை நிகழ்வும் மருதனார்மடம் வட இலங்கைச் சங்கீத சபை வளாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. உடுவில் பிரதேச செயலர் பா.ஜெயகரன் தலைமையில் இடம்பெற்ற கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் வலி.தெற்குப் பிரதேசசபையின் செயலாளர் திருமதி சாரதா உருத்திரசம்பவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.** (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## பட்டினியை வைத்து வாக்குப்பேரம்

ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம், உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும் இப்படித்தான் இருக்கின்றது இலங்கையின் இப்போதைய பொருளாதாரநிலையும். 'நிதி நெருக்கடி குறைந்துவிட்டது, பொருளாதாரம் உயர்ந்துவிட்டது, எல்லோரும் கடன் தர முண்டியடிக் கிறார்கள், மக்களின் வாழ்க்கைத்தரம் சிறப்பாகவுள்ளது. திறைசேரி நிரம்பி வழிகிறது' என்று நாட்டில் பாலாறும் தேனாறும் ஓடுவது போன்ற மாயையைச் சிருஷ்டிக்க ஆட்சியாளர்கள் முயன்றுகொண்டிருக்கிறார்கள். ஆனால் அவையெல்லாமே கானல்நீர் போன்று எல்லோரையும் ஏமாற்றுகின்ற ஒரு பொய்யான விம்பமே. இந்தப் பொய்விம்பம் ஆட்சியாளர்களுக்கு அவசியமானது. தேர்தல் காலம் நெருங்கி வந்துவிட்ட சூழலில், தமது ஆட்சியால் நாட்டில் இருந்த பஞ்சமெல்லாம் பஞ்சு பஞ்சாகப் பறந்துபோய் விட்டதாக மக்களை நம்பச் செய் தால் மாத்திரமே அவர்கள் தங்கள் ஆட்சிக்கதிரையைத் தக்கவைக்கமுடியும். மாறாக, அவர்களால் நாடு நாசமாகி விட்டது என்ற உண்மையை மக்கள் உணர்ந்துகொண்டால், அதிகாரத்தில் இருப்போரின் பதவிக்கனவுகள் பகல்கன வாகவே மாறவேண்டியது தான்.

என்னதான் ரணில் தலைமையிலான அரசாங்கம், நாட்டில் எல்லாமே முன்னேற்றமடைந்துவருகின்றன என்று திரும்பத் திரும்பச் சொன்னாலும், தமக்கேற்ற வகையில் ரூபாவின் பெறுமதியைக் கூட்டிக் குறைத்துச் சித்து விளையாட்டுக் காட்டினாலும், உண்மைகள் ஏதோ ஒரு ரூபத்தில் வெளிப்படவே செய்கின்றன. உலகவங்கி அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றில், 'இலங்கையின் சனத்தொகையில் நான்கில் ஒரு பங்கினர் பொருண்மியத்தில் நலிவுற்றோராக மாறிவிட்டனர்' என்ற தகவலை வெளியிட்டுள்ளது. இவ்வாறு ஒருநாட்டின் மொத்தச்சனத்தொகையில் 25 வீதமானோர் இவ்வாறு பொருண்மியத்தில் இழிநிலைக்குத் தள்ளப்படுவதென்பது நாட்டின் பொருளாதாரக் குறிகாட்டியின் மோசமான தன்மையே. இதைவிட உலகவங்கி வெளியிட்ட அந்த அறிக்கையில், '60 வீதமானோரின் வருமானம் சடுதியாகக் குறைவடைந்தும் விட்டது. சிறிய, நடுத்தர தொழிற் சாலைகள் மூடப்படுகின்றன. வாழ்க்கைச்செலவு உயர்ந் துள்ளது' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இனிமேல் பொருண்மியத்தில் நலிவுற்றோரின் எண்ணிக்கை பலமடங்காக உயரும் சாத்தியங்களே தென்படுகின்றன. ஆட்சியாளர்கள் சொல்லிக்கொள்வது போல, இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவு மில்லை, பொருளாதாரம் நிமிரவுமில்லை என்பதையே பெருகிவரும் பொருண்மியநலிவுக்குள்ளானோரின் எண்ணிக்கை கட்டியம் கூறுகின்றது. இன்னும் சொல்லப் போனால், மக்களின் இந்த அவலநிலைக்கு முழுக் காரணமும் ஆட்சியாளர்களின் தவறான அணுகு முறையே.

மக்களை ஏதுமற்றவர்களாக்கி, நடுத்தெருவில் விட்டு விட்டு, 'நாடு செழிப்போடு உள்ளது' என்று படங்காட்டு வதை எவருமேநம்பப்போவதில்லை. புள்ளிவிவரங்களும், அறிக்கைகளும் மட்டுமே உண்மையின் உரைக்கல்லாக இருப்பதில்லை. கண்முன்னே உயிரோடு உலவும் மனி தர்களை விடவும் வேறு சிறந்த ஆதாரம் எதுவுமில்லை. நாலைந்து வருடங்களுக்கு முன்னர் இருந்ததை விட இப்போது வாழ்க்கைச்செலவு பன்மடங்கு உயர்ந்த போதும், மக்களின் வேதனத்தில் உயர்வில்லை. இதனால் ஒவ்வொரு குடும்பமும் வாயைக்கட்டி, வயிற்றைக் கட்டித்தான் இலங்கையில் சீவிக்கமுடியும் என்ற நிலை தோற்றம் பெற்றுவருகின்றது. ஒருவேளை இப்படி மக் களை ஏதுமற்றவர்களாக்கிவிட்டு, பின்னர் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதைப் போல எதையேனும் கிள்ளித் தெளித்தால், திரண்டுவந்து எல்லோரும் ஆளும் தரப் புக்கே வாக்களிப்பர் என்று ரணில் விக்கிரமசிங்க கணக்குப் போட்டிருக்கிறாரோ என்னவோ. எரிகிற வீட்டில் சுருட்டைப் பற்றவைக்கக்கூடியவரல்லவா அவர். அதனால் இப்படி அவர் திட்டமிட்டிருந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஆனால் மக்களைப் பட்டினிப் படு குழிக்குள் தள்ளிவிட்டு, அந்தப் பசியை வைத்து வாக்கு பேரம் பேசும் எந்தவொரு அரசியல்வாதியும் வரலாற்றில் நிலைத்ததில்லை. வரலாறு ஒரு கண்டிப்பான கிழவி என்பர். அந்தக் கண்டிப்பான கிழவி ரணிலுக்கு என் னென்ன தீர்ப்பெழுதக் காத்திருக்கிறாளோ தெரியவில்லை.



# கூடிய விருப்புவாக்கு எனக்கு: நான் பொதுவேட்பாளராக வரவா?

### கிண்டலடிக்கிறார் ஆளும் கட்சி அமைச்சர் ஜீவன்

**கொழும்பு, ஏப். 12**

**கடந்த பொதுத்தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் (ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 155 வாக்குகள்) பெற்ற ஒரேயொரு தமிழ் வேட்பாளர் நான்தான் .எனவே, ஜனாதிபதித் தேர்தலில் நான் தமிழ்ப் பொது வேட்பாளராக களமிறங்கவா? இவ்வாறு புன்னகையுடன் கேள்வி எழுப்பியுள்ளார் அமைச்சர் ஜீவன் தொண்டமான்.**

கொழும்பில் நேற்றுமுந்தி னம் நடைபெற்ற ஊடக சந் திப்பின்போது.

ஜனாதிபதித் தேர்தல் வருவ தால் பலரும் அது தொடர் பில் பல கோணங்களில் கருத்துகளைமுன்வைக்க லாம். என்னைப் பொறுத்த வரை தமிழ், முஸ்லிம், சிங்க ளம் என பிரிவினையுடன் வாழமுடியாது- என்றார் ஜீவன். (ஒ-44)

## சம்பள அதிகரிப்புக்கு 13 பில்லியன் ரூபா அரசு மேலதிக செலவு



அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்காக 13 பில்லியன் ரூபா மேலதிகமாக செலவிடப்படவுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட் டமைக்கமைய கடந்த ஜனவரி மாதம் அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது. புத் தாண்டை முன்னிட்டு அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ஏப்ரல் மாத சம்பளத்தில் மிகுதி 5 ஆயிரம் ரூபா இணைக்கப் பட்டுள்ளது - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## பெரமுன உயிர்ப்புக்கு நாமல் வேலைத்திட்டம்

பொதுஜன பெரமுனவை கீழ் மட்டத்திலிருந்து பலப்படுத் தும் புதிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜ பக்ச தெரிவித்துள்ளார். பெர முனவின் அரசியல் குழுக் கூட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சியை வலுப்படுத்துவதற் கான முதற்கட்ட நடவடிக்கை யாக வீடுகளுக்குச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வுள்ளது. எதிர்வரும் எந்த வொரு தேர்தலுக்கும் முகங் கொடுக்கும் வகையில் கட்சி பலப்படுத்தப்படும்- என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## விமானநிலையத்தில் ஸ்மார்ட் கழிப்பறைகள்

கொழும்பு, ஏப். 12

கட்டுநாயக்கா விமான நிலை யத்தில் 150 ஸ்மார்ட் கழிப்ப றைகளை அமைப்பது உட்பட பல்வேறு உதவித்திட்டங்களுக் கென ஜப்பான் 8.4 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது. இந்தக் கழிப்பறைகள் மாற்றுத் திறனாளிகளுக்கென விசேட மாக வடிவமைக்கப்பட்டுள் ளன. (ஒ-6)

## கறுவா அருங்காட்சியகம் இலங்கையில் திறப்பு

உலகின் முதலாவது கறுவா அருங்காட்சியகம் இலங்கை யின் மீரிசை பிரதேசத்தில் கடந்த ஆறாம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கறுவாஏற்றுமதியில் இலங்கை முன்னணியில் திகழ்கிறது. அதற்கமைய புராதன காலத் திலிருந்து இன்று வரையான கறுவா வர்த்தகம் அருங்காட் சியகத்தில் ஓவியங்களாக சித்திரிக்கப்பட்டுள்ளதுடன் கறுவாப் பட்டை உரிக்கும் செயற்பாடும் அங்கு காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும் போலிக்கறுவாவுக் கும் நிஜ கறுவாவுக்குமிடை யிலான வேறுபாடுகளும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. (ச-6)

### நாளை

13.04.2024

**சனிக்கிழமை**

**பங்குனி 31**

சுபநேரம் : 03.06 -04.36

ராகுகாலம் : 09.06 - 10.36

### நாளொரு நல்வார்த்தை

**கோபம் விஷம் குடிப்பதைப் போன்றது**
**ஆனால் நம்பிக்கை உங்கள்**
**எதிரிகளையும் அழிக்கும்**
**வல்லமை மிக்கது**

**—நெல்சன் மண்டேலா—**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ சேவையில் 8000 பேர் தலைமறைவு

கொழும்பு, ஏப். 12

**2023 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை ஆயுதப்படையின் 197 அதிகாரிகள் உட்பட 8 ஆயிரத்து 146 பேர் இராணுவ சேவையிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.**

மார்ச் மாதத்தில் மட்டும், ஆயுதப் படைகளின் ஒன்பது அதிகாரிகளுடன் 442 பேர் ஆயுதப் படையை விட்டு வெளியேறியுள்ளனர்.

மேலும் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் இராணுவ சேவியிலிருந்து 137 இராணுவ அதிகாரிகள், 18 கடற்படை அதிகாரிகள் மற்றும் 19 விமானப்படை அதிகாரிகள் இராணுவ சேவையை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள் காரணமாக இராணுவத்தை விட்டு விலகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## இராணுவப் பல்கலையில் மருத்துவம் படிக்க வாய்ப்பு

கொழும்பு, ஏப். 12

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பாடங்களில் தேர்ச்சி பெற்று மருத்துவப் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்காதவர்கள் சேர். ஜோன் கொத்தலாவல இராணுவப் பல்கலைக்கழகத்தில் பணம் செலுத்தி மருத்துவப் பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இசட் புள்ளி அடிப்படையில் மருத்துவப் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்குத் தகுதி பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியுமெனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. வருகிற கல்வியாண்டு முதல் மாணவர்கள் சேர். ஜோன் கொத்தலாவல இராணுவப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். இதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது. (ஒ-6)



தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு, யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எம்.ஜி.டபிள்யு.சி.பீ. விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கு அமைவாக விளையாட்டுப் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றன. இனங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கில், தமிழ் மற்றும் சிங்களப் போட்டியாளர்கள் பாதுகாப்புத் தரப்பினர் இன, மத பேதமின்றி இதில் கலந்து கொண்டனர். (ஒ-27)

## தமிழ்ப் பொதுவேட்பாளர்: இனமுரண்பாடாக்குமாம்!!

### கூறுகிறார் ராதாகிருஷ்ணன்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது இன முரண்பாட்டுக்கு வழிவகுக்கும் என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்விடயத்தை சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரை நிறுத்தினால் அவர் வெற்றி பெறுவாரா? இல்லையா? என்பது ஒரு புறமிருக்க நாட்டு மக்களிடையே இன முரண்பாடு ஏற்படும். ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து ஒருவருக்கு ஆதரவளிக்க வேண்டும். அதே நேரத்தில் சிறுபான்மை மக்களும் வாக்குகளைச் சிதறடிக்காமல் தமக்குப் பிடித்தமான ஜனாதிபதியைத் தெரிவு செய்யவேண்டும் - என்றார். (ஒ-இ)

## சீனாவின் பங்களிப்பில் இலங்கையில் ஆய்வகம்

கொழும்பு, ஏப். 12

பசுமைத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு தொழில்நுட்பங்களைப் பிரபலப்படுத்துதல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு சீனாவுடன் இணைந்து ஆய்வகம் ஒன்றை இலங்கையில் நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிருமிநாசினிப் பாவனையைக் குறைத்தல், தேயிலைத் தோட்டத்துக்கான உயிரியல் கட்டுப்பாட்டு தொழில்நுட்பம், தேயிலை கிருமிநாசினி எச்சங்களை இலக்காகக் கொண்ட இடர் கண்காணிப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அந்த ஆய்வகம் நிறுவப்படவுள்ளது. (ச-இ)

## பண்டிகைக்கால நாள்களில் சட்டவிரோத மதுவிற்பனை!

### மதுவரி திணைக்களம் நடவடிக்கை

சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்பவர்களை இலக்கு வைத்து பண்டிகைக் கால நாள்களில் விசேட நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவும், சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்தவும் மதுவரித் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

மதுவரி சட்ட விதிகளின் கீழ் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். தடைசெய்யப்பட்ட காலத்தில் மதுபானம் விற்பனை செய்யும், உரிமம்பெற்ற உணவகம் அல்லது மதுபான நிலையங்கள் கண்ட றியப்பட்டால் அவர்களின் மதுபான விற்பனைக்கான உரிமம் இரத்துச் செய்யப்படும் என்றும் கலால் ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி எச்சரித்துள்ளார். (ச-இ)



## கிராம அலுவலர் கௌரவிப்பு

சாவகச்சேரி ஏப். 12

சங்கத்தானை ஜே/302 பிரிவிலிருந்து சரசாலை பிரிவுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற கிராம அலுவலர் மகாலிங்கம் அமலதீபனுக்கு பிரியாவிடை நிகழ்வும், சங்கத்தானைப் பிரிவுக்கு கடமையினை பொறுப்பேற்ற கிராம அலுவலர் திருமதி கலையரசி வினோதனுக்கு வரவேற்பு நிகழ்வும் நேற்று வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெற்றது.

சங்கத்தானை மாதர்கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் ஏற்பாட்டில், சங்கத்தானை சாரதா சனசமூக நிலையத்தில் மாதர்கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி அம்பிகைபாலன் சுசீலா தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் சாரதா சனசமூக நிலையத் தலைவர் ஜெ.சஞ்சீவ் குமார், மாதர்கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்,பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-9)

## முன்னாள் ஜனாதிபதிகளே அரசியலிலிருந்து ஒதுங்குங்கள்

### டலஸ் அழகப்பெரும கோரிக்கை

கொழும்பு, ஏப். 12

நான்கு முன்னாள் ஜனாதிபதிகளும் தமது சொந்த நலனுக்காகவும், மக்களுக்காகவும் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளான [illegible] ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன மற்றும் கோத்தாபய ராஜபக்ச ஆகியோர் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கி இருக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அரசியலில் இருந்து விலகி இருப்பது அவர்களின் சொந்த ஆரோக்கியத்துக்கும், மக்களின் நலனுக்கும் நல்லது. அவர்களுக்காக



செலவிடப்படும் பொது நிதியை எந்த அரசியல் விடயத்துக்கும் பயன்படுத்தக்கூடாது. - என்றார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருட தினத்தன்று தனியார் பஸ் இல்லை

கொழும்பு, ஏப்.12


புது வருடத் தினத்தன்று தனியார் பஸ் சேவைகள் எதுவும் இடம்பெறாது என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

புதுவருடப் பிறப்பன்று தனியார் பஸ் சேவைகள் எவையும் இடம் பெறாது. புதுவருடப் பிறப்புக்கு மறுநாள் 25 வீத பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதுவருட தினத்தை முன்னிட்டு மேலதிக பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது. 10ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை மேலதிகமாக 700 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது. (அ-எ-6)

**விற்பனைக்கு**
1 மாத ஊர்க்கோழிக்குஞ்சும், Tea and Coffee மெசின் (RA) விற்பனைக்கு உண்டு.
077 873 0129

## மரண அறிவித்தல்



**இராசலிங்கம் இலட்சுமிப்பிள்ளை**

விவேகானந்தா வீதி, மஞ்சத்தடி தெற்கு, இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் இலட்சுமிப்பிள்ளை நேற்று 11.04.2024 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னமோனை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசலிங்கம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசையா, கனகசபாபதி, ஆறுமுகம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்) மற்றும் இராசலட்சுமி, நாகையா (இலண்டன்), காலஞ்சென்றவர்களான சின்னம்மா, சறோயினிதேவி மற்றும் விஜயகுமார் (அண்ணா பாம் முகாமையாளர்), ஜெகதாம்பாள் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பராசக்தி மற்றும் அன்னலட்சுமி, குஞ்சுமணி, சிவபாக்கியம் காலஞ்சென்ற மகேஸ்வரி, சிவனேசமணி மற்றும் சிவனேஸ்வரி, புஸ்பராணி (லண்டன்), பகவதி, காலஞ்சென்ற சிற்சபேசன் மற்றும் செல்வரத்தினம், சோதிராசா, காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் (கனடா), செல்லையா, கணேசு, செல்லத்துரை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(08/54709) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 08 . 1927 — மறைவு 11 . 04 . 2024



**திருமதி சிவபாக்கியம் சுப்பிரமணியம்**

யாழ்ப்பாணம் உடுவிலை பிறப்பிடமாகவும் சிறுவிளான் மற்றும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சுப்பிரமணியம் அவர்கள் நேற்று 11.04.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து-தங்கம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற சரவணமுத்து-சின்னாச்சி தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சரவணமுத்து சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற புஸ்பராணி, மற்றும் புண்ணியசீலன் (ஓய்வுபெற்ற அதிபர் யாழ் யூனியன் கல்லூரி), சத்தியசீலன், சாவித்திரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகேந்திரவர்மன் (லண்டன்), காலஞ்சென்ற யமுனா, தயாநிதி, மற்றும் குகலிங்கம் (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கோமதி சதானந்தகுமார் (அவுஸ்ரேலியா), வர்மேந்திரன் வர்ஜினி (திருக்கோணமலை), இந்துமதி ரமேஸ்குமார் (கனடா), ஜெயமதி ஜோண்சன் (லண்டன்), கேதார்ணி (கொழும்பு), நர்த்தனி ஜோண்சத்தியரஞ்சித் (கொழும்பு) மற்றும் கோகுல பிரசாத் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பேர்த்தியும் கெவின், அபிநயா, லஷான், ஆவர்த்தன், ஆர்த்தி ஷாமிலா, ஆகவி, அபிராம், ஆத்மன், ஆதித்தி ஆகியோரது அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கோண்டாவில் கிழக்கு, பலாலி வீதியில் C.T.B டிப்போவுக்கு அருகாமையில் உள்ள இல்லத்தில் 12.04.2024 இன்று பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று பகல் 1.00 மணியளவில் பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


தொடர்புகளுக்கு:
சு. புண்ணியசீலன் (மகன்) 077 885 5070
சு. சத்தியசீலன் (மகன்) 077 808 5286
கு.சாவித்திரி (மகள்) 077 059 4637

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 197) V-1

## மரண அறிவித்தல்

மலர்வு 02 . 09 . 1947 — உதிர்வு 11 . 04 . 2024



**சின்னத்துரை மகேந்திரன்**

பிரான்பற்று பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை மகேந்திரன் (முன்னாள் பண்டத்தரிப்பு கிராமிய வங்கிச்சேவை முகாமையாளர், முன்னாள் வலி தென்மேற்கு பிரதேசசபை தவிசாளர், முன்னாள் வலிதென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர், பிரான்பற்று கிராம அபிவிருத்தி சங்க தலைவர், கலைமகள் சனசமூகநிலைய தலைவர்) நேற்று (11.04.2024) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சத்தியவதி தம்பதியரின் மருமகனும், நாகநந்தினியின் அன்புக் கணவரும், திவ்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - பூநகரி), பிரேந்திரா (கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் - வேலணை), குகேந்திரன் (டினோஷன் Hardware), வித்யா (ஆசிரியை - கொ/விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயம்), நிகேதனா (யாழ் பல்கலைக்கழக மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், விமலாதேவி மற்றும் கந்தசாமி (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயகுமார், சாந்தகுமார் (சுவிஸ்), விஜயகுமார் (UK), ஜெயக்குமார் (UK), சிவகுமார் (UK), சுபாசினி (UK), மதிவதனி, காலஞ்சென்ற கந்தசாமி மற்றும், இரத்தினசிங்கம், காலஞ்சென்ற வசந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2024) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] வீதி
பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

(CS/00195) J-1

தகவல்
குடும்பத்தினர்
077 432 9354

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பர்களின் இதய அஞ்சலி



தோற்றம்
15.04.1927

மறைவு
10.04.2024

## இராஜேந்திரம் வாலாம்பிகை

எமது அன்பு நண்பன் கனோஜி அவர்களின் பாசமிகு அம்மம்மா இராஜேந்திரம் வாலாம்பிகை அவர்களின் மறைவை இட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் நண்பர்கள்**

# மரண அறிவித்தல்

மண்ணில்
07 . 02 . 1950



விண்ணில்
11 . 04 . 2024

## சிவலிங்கம் நாகேஸ்வரி

இளவாலை மாரிசன்கூடலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் நாகேஸ்வரி நேற்று (11.04.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - திலகவதி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், கந்தையா சிவலிங்கத்தின் (Joy Hardware Stores உரிமையாளர்) பாசமிகு மனைவியும், யாழினி (Director, Getwell Medicals (Pvt).Ltd, Victoria Palace Lanka (Pvt).Ltd Constell Associates) ஜனகன் (Siva Auto Solution, கனடா), மகிழினி (L.L.B, கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செந்தூரன், ஃபோரெட், கிரிசாந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரிட்டிகா, ரவிகேஷ், சனாசா, தறுன், நிதுசன், மாயலட்சுமி ஆகியோரின் பேர்த்தியும், கதிர்காமநாதன், சுப்பிரமணியம், கிட்னதாஸ் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாரிசன்கூடல் பாதகன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாரிசன்கூடல்.**
**இளவாலை.**
**077 155 8937**

(CS 00196) S-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர்
## விக்னேஸ்வரன் பரமானந்தி
## (விக்கி)

பிறப்பு
22.02.1948

இறப்பு
13.03.2024

யாழ் கட்டுவனைப் பிறப்பிடமாகவும், ஊரெல்லை வீதி, மீசாலை வடக்கை வதிவிடமாகவும் பிரான்ஸ் Noisiel ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட விக்கினேஸ்வரன் பரமானந்தி அவர்களின் 31ம் நாள் அந்தியேட்டிக்கிரியை (12.04.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது பிரான்ஸ் இல்லத்திலும்,

அதனைத்தொடர்ந்து (13.04.2024) சனிக்கிழமை மதியம் 12 மணியில் இருந்து 5 மணி வரை 33 Boulevard Thibault de Champagne 77600 Bussy Saint Georges என்னும் இடத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேள்ளயில் நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும் முகநூல், மின்னஞ்சல் ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும், இலங்கையிலுள்ள உறவினர் வீடுகளுக்கு சென்று அனுதாபத்தைப் பகிர்வு செய்தவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றும் இன்றுவரை எமக்குச் சகல வழிகளிலும் உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பிரான்ஸ்**

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆர்.சி.பியை வீழ்த்தியது மும்பை

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் 25 ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியை 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இரு அணிகளும் மோதிக்கொண்ட நேற்றைய ஆட்டம்.மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

ஆர்.சி.பி. அணியின் ஆரம்ப வீரர்களாக ஹோக்லி மற்றும் டூப்ளசி களமிறங்கினர். ஹோக்லி 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அறிமுக வீரர் வில் ஜேக்ஸ் 8 ஓட்டங்களுடன் வெளியேறினார். மூன்றாவது விக்கெட்டுக்காக ஜத் பட்டிதார் மற்றும் டூப்ளசி இணைந்து 82 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். பட்டிதார் 26 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதன் பின்னர் வந்த மெக்ஸ்வெல் 4 பந்துகளை வீணாக்கி "டக் அவுட்" ஆனார்.

பின்னர் வந்த தினேஷ் கார்த்திக்குடன் 45 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பெற்றார் டூப்ளசி. 40 பந்துகளில் 61 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது அவர் ஆட்டமிழந்தார். அடுத்த பந்தில் மஹிபால் லோம்ரோர் பவிலியன் திரும்பினார்.

ஏனையோர் எவரும் சோபிக்காத நிலையில், 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களைச் சேர்த்தது பெங்களூரு அணி.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி ஆரம்பம் முதல் அதிரடி காட்டியது. ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய ரோஹித் சர்மா மற்றும் இசான் கிஷான் அதிரடியாக ஆடினார்கள். ரோஹித் சர்மா 24 பந்துகளில் 38 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அதிரடியாக ஆடிய இசான் கிஷான் 40 பந்துகளில் 91 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். சூரியகுமார் யாதவ் 19 பந்துகளில் 52 ஓட்டங்களைப் பெற்றார். ஹார்த்திக் பாண்டியா 6 பந்துகளில் 21 ஓட்டங்களும், திலக் வர்மா 10 பந்துகளில் 16 ஓட்டங்களும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

15.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் மும்பை இந்தியன்ஸ் அணி 199 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் ஆர்.சி.பியை வீழ்த்தியது. (எ)

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 12 . 12 . 1945



உதிர்வு 09 . 04 . 2024

### முத்தையா தனபாலசிங்கம்

(ஓய்வு நிலை உபஅதிபர். யா/வைத்தீஸ்வரா கல்லூரி)

யா/ வைத்தீஸ்வரா கல்லூரியில் ஆசிரியராகவும். உப அதிபராகவும் சிறப்பாகக் கல்விச்சேவையாற்றி இறையடி சேர்ந்த மு.தனபாலசிங்கம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து கல்லூரிச்சமூகம் மிகவும் அதிர்ச்சி அடைந்துள்ளது. அன்னாரின் இழப்பால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தனபாலசிங்கம் அவர்கள் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் கல்வி மற்றும் இணைப்பாடவிதான அபிவிருத்திக்கு தன்னால் இயன்ற ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்துள்ளார். அன்னாரின் இழப்புக்கு கண்ணீர் துளிகளை காணிக்கையாக்குகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தகவல்:
வைத்தீஸ்வரா கல்லூரி சமூகம்,
அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள்

(CS 00198) S-1

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் செல்லம்மா



அல்லாரை வடக்கு, கொடிகாமத்தினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் செல்லம்மா அவர்கள் நேற்று (11.04.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், சின்னத்துரை சிவசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும், சின்னத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், விஜயபாரதி (ஆசிரியர், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி). லக்சுமிகாந் (ஆசிரியர், யா/சிதம்பராக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மோகலிங்கம் (சாரதி, தொழில்த்துறைத் திணைக்களம்), அனுஷா (ஆசிரியர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தர்மிஹா (ஆசிரியர், மு/கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை), விதுர்ஷா (ஆசிரிய மாணவி). மாதுரி, மயூரி, அட்சகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.30 மணியளவில் கட்டைபறிச்சான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 844 9759

(CS 00201) S-1

## நல்லூர் தெற்கு சனசமூக நிலைய 75th ஆண்டு பவள விழாவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக நடாத்தும் ஆண்களுக்கான 75 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி - 2024

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 75ம் ஆண்டு பவள விழாவினை முன்னிட்டு அகில இலங்கை ரீதியான மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டியினை நடாத்தும் வகையில் "குணசிங்கம்" ஞாபகார்த்தமாக நல்லூர் தெற்கு சனசமூக நிலைய அங்கத்தவரும், கனடா வாழ் திரு. பாலமுரளி (பாலி) யின் பூரண நிதி அனுசரணையில், நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறும் 75 மைல் கொண்ட குறித்த சைக்கிள் ஓட்டப்போட்டியானது எதிர்வரும் 21.04.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

### போட்டி பரிசு விபரங்கள்



- முதலாம் பரிசு - 1 பவுண் தங்கச் சங்கிலி
- இரண்டாம் பரிசு - ரூபா 50,000/-
- மூன்றாம் பரிசு - ரூபா 25,000/-
- ஆறுதல் பரிசு - 5 பேருக்கு தலா ரூபா 10,000/-

### போட்டி தொடர்பான விதிமுறைகள் மற்றும் முக்கிய குறிப்புகள்

1. போட்டி விண்ணப்ப முடிவுத்திகதி 18.04.2024 ஆகும்.
2. போட்டியாளரின் இதய துடிப்பானது சீராக உள்ளமையை உறுதிப்படுத்தும் ECG சோதனை அறிக்கை (தகுந்த அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு கூடமொன்றில் போட்டித் தினத்திற்கு 10 நாட்களுக்குள் பெறப்பட்ட உத்தியோக பூர்வ ஒப்பம் மற்றும் இலச்சினையுடன் கூடிய ECG சோதனை அறிக்கையின் தெளிவான நிழற் பிரதி விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும்)
3. போட்டியாளரின் உடற் தகைமையை உறுதிப்படுத்தும் மருத்துவ சான்றிதழ் இலங்கை மருத்துவ சம்மேளத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் ஒருவரிடம் நாடித்துடிப்பு மற்றும் குருதி அமுக்கம் என்பன பரிசோதிக்கப்பட்டு வைத்தியரின் உத்தியோக பூர்வ ஒப்பம் மற்றும் இலச்சினையுடன் கூடிய போட்டித் தினத்திற்கு 10 நாட்களுக்குள் பெறப்பட்ட மருத்துவ சான்றிதழின் தெளிவான நிழற் பிரதி விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும்)
4. ECG சோதனை அறிக்கை மற்றும் மருத்துவரின் தகுதிச் சான்றிதழ் என்பவற்றின் மூலப் பிரதிகள் போட்டி ஆரம்பிக்கும் முன்னர் நிர்வாகத்தினரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. போட்டித் தினத்தன்று போட்டிக் கட்டணமாக ரூபா 200/- இனை போட்டியாளர்கள் நிர்வாகத்தினரிடம் செலுத்த வேண்டும்.
6. மேலதிக தொடர்புகளுக்கு, 0770638790 மற்றும் 0772718236 ஆகிய தொலைபேசி எண்களைத் தொடர்புகொள்ளவும்.
7. கீழ்காணும் இணைப்பிற்கு செல்வதன் மூலம் விண்ணப்பங்களை ஒன்லைன் இல் விண்ணப்பிக்கலாம்.
https://docs.google.com/forms/d/e/1FAIpQLSenX77||-9B2nvxkhsAnWnuAShJQPXW73s3oacH2vabehdG3g/viewform?usp=sf_link

நிர்வாகம்
நல்லூர் தெற்கு சனசமூக நிலையம்

(cs.54702) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 04 . 1943



மறைவு 11 . 04 . 2024

### அழகர் உருத்திரன்

மலேசியாவை பிறப்பிடமாகவும், சுன்னாகம், பொரளையை வசிப்பிடமாகவும் கொண்ட அழகர் உருத்திரன் (முன்னாள் City Medical Sales Representative) அவர்கள் நேற்று (11.04.2024) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அழகர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற அப்புத்துரை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், ஹரிணி, ஹர்ஷயன் (DM Singhagiri(Pvt)Ltd) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவிஷங்கரின் அன்பு மாமனாரும், திவ்யேஷ், பிரணவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2024) வெள்ளிக்கிழமை பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் பி.ப 1.00 மணியளவில் நடைபெற்று பி.ப 2.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 797 4045

(CS 00199) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுக்குளத்தின் கீழ் பங்கீட்டு முறையில் சிறுபோகம்

கிளிநொச்சி, ஏப். 12


**நீண்ட இழுபறியின் பின்னர் இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக செய்கையை பங்கீட்டு அடிப்படையில் மேற்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

2024ஆம் ஆண்டுக்கான இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக செய்கை சம்பந்தமான விசேட கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்டச் செயலர் சு. முரளிதரன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.


கடந்த 8ஆம் திகதி திங்கட்கிழமை மாவட்டச் செயலகத்தில் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலையடுத்து சுழற்சி முறையில் 15 ஆயிரத்து 560 ஏக்கர் செய்கை மேற்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், சுழற்சி முறை வேண்டாம் என விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்த நிலையிலேயே மீண்டும் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் நடைபெற்றது.

பல மணி நேரக் கலந்துரையாடலின் பின்பு சுழற்சி முறையைத் தவிர்த்து பங்கீட்டு முறையில் வழமைபோன்று செய்கை மேற்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கரைச்சிப் பிரதேச செயலர், கமநல அபிவிருத்தித் திணைக்கள மாவட்ட பிரதி ஆணையாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனத்தின் கீழ் உள்ள 22 கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ஒ-27)



தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய சோபகிருது வருட மஹோற்சவப் பெருவிழாவின் மஞ்சத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது. (ப-66)



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா, ஆலய முன்றிலில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ப-66)

# ரூ. 6 கோடி பெறுமதியான போதையுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 12

சுமார் 6 கோடி ரூபா பெறுமதியான 1 கிலோவுக்கும் அதிகமான ஹெரோய்ன் போதைப்பொருளைக் கடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று மாளிகாவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் அலுவலர்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த போதைப்பொருளை கிராண்ட்பாஸ் பகுதிக்கு சந்தேகநபர் கொண்டு செல்லும் போதே கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிலோ 105 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் போதைப் பொருள் கடத்தல் மூலம் ஈட்டிய 7இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டது. (ச-இ)

# மாடு திருடும்போது மாட்டிய சந்தேகநபர்

முல்லைத்தீவு, ஏப். 12

விசுவமடு மாணிக்கபுரத்தில் மக்களின் வளர்ப்பு மாடுகளைத் திருடி இறைச்சிக்காக விற்பனை செய்யும் சந்தேகநபரை கிராமமக்கள் பிடித்து பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைத்துள்ளனர்.

11 பேரின் கால்நடைகள் இதுவரை காணாமற் போயுள்ளன. இந்த நிலையில் மக்களின் கால்நடைகளை களவாகப் பிடித்து தேராவில் பகுதியில் இருக்கும் இறைச்சி வியாபாரி ஒருவருக்கு கொடுக்கும் திருடன் தொடர்பில் மக்களுக்குத் தகவல் தெரியவந்துள்ளது. இதைத் தொடர்ந்து விழிப்படைந்த கிராமமக்கள் இரவு நேரத்தில் கண்விழித்து காவல் இருந்துள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வளர்ப்பு மாட்டைப் பிடித்து இறைச்சிக்காக கடத்திச் செல்ல முற்பட்டுள்ளார். இதன்போது மக்களால் அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஒ-19)


# கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஏப்.12

பிரமந்தனாறு கிராம அலுவலர் பிரிவில் உள்ள பயன்படுத்தப்படாத காணிகளை பயன்படுத்துதல், நீர்ப்பாசன வடிகாலமைப்பு, ஏற்று நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளப்பெருக்கு பற்றிய விசேட ஆய்வு செயற்றிட்டத்தின் ஆரம்ப கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர் த.உமையாள் தலைமையில் பிரமந்தனாறு பொது நோக்கு மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

விசேட ஆய்வுச் செயற்றிட்டத்தின் நோக்கம் மற்றும் பிரதேச மக்களின் உப உணவுப் பயிர்ச்செய்கை முறை, வடிகாலமைப்பின் தன்மை, ஏற்று நீர்ப்பாசனத்தின் சாத்தியக் கூறுகள், வெள்ளப்பெருக்கு இடம்பெறும் பகுதிகள் தொடர்பான பொதுமக்களின் கருத்துகள் தொடர்பில் ஆராயப்பட்டன. (ஒ-13)



# 'வன்னிப்பெரும் சமர்' துடுப்பாட்டப் போட்டி

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கும் இடையில் வருடாவருடம் நடத்தப்படும் 'வன்னிப்பெரும் சமர்' துடுப்பாட்டப் போட்டி, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமானது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்தார். (ப-13)

# பண்டிகைக்காலத்தை முன்னிட்டு சுகாதாரத்துறையினர் சோதனை

கிளிநொச்சி, ஏப் 12

பண்டிகைக்காலத்தை முன்னிட்டு பூநகரிப் பிரதேசத்தில் விசேட உணவுப்பாதுகாப்புப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பூநகரிப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில், பூநகரி, ஜெயபுரம், முழங்காவில் பிரிவுகளின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து இந்த விசேட உணவுப்பாதுகாப்புப் பரிசோதனைகளை நடத்தினர்.

இதன்போது கைப்பற்றப்பட்ட சுகாதாரத்துக்கு கேடான பொருள்கள் அழிக்கப்பட்டன. கைப்பற்றப்பட்ட ஒரு தொகுதி உணவுப்பொருள்களை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வீதியோரங்களில் சுகாதாரமற்ற முறையில் பழச்சாறு, சிற்றுண்டி மற்றும் சமூத் வியாபாரம் செய்வோர் எச்சரிக்கப்பட்டனர். (ஒ-9)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கத்திக்குத்தில் இளைஞர் சாவு; நீதி கோரி திரண்ட ஊர் மக்கள்

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாற்றில் கத்திக் குத்துக்கு இலக்கான இளைஞரின் சாவுக்கு நீதிகோரியும் கைதான சந்தேக நபருக்கு பிணைவழங்க வேண்டாம் என்று வலியுறுத்தியும் கிராம மக்கள் ஒன்றிணைந்து கடந்த செவ்வாய்க்கிழமை போராட்டம் நடத்தியுள்ளனர்.

ஏப்ரல் 4ஆம் திகதி பிரமந்தனாறு மகாவித்தியாலய விளையாட்டுப் போட்டியைப் பார்த்துவிட்டுத் திரும்பிச் சென்ற சவரிமுத்து ஜோன்பற்றிஸ் (வயது - 30) என்பவர் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் சந்தேகநபரை தர்மபுரம் பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில் பிரமந்தனாறு, மயில்வாகனபுரம், கல்லாறு போன்ற பகுதிகளில் இடம்பெறும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தக்கோரியும் உயிரிழந்த குடும்பத் தலைவருக்கு நீதிகோரியும் கிராம மக்கள் நெத்தலியாறு பாலத்திலிருந்து கவனவீர்ப்பாக தர்மபுரம் பொலிஸ் நிலையம் வரை சென்று பொலிஸாருக்கும், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் மனு ஒன்றைக் கையளித்துள்ளனர். (ஒ-19)

## சட்டவிரோதமாக...

அவர்கள் ஏ-9 வீதியை மறித்து மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தால், ஏ-9 வீதியூடான போக்குவரத்து சிலமணிநேரம் பாதிக்கப்பட்டது. அத்துடன் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட தள்ளுமுள்ளில் ஒருபெண் இலேசான காயங்களுக்கு உள்ளானார்.

இது குறித்து போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்ததாவது:-

"யாழ்.போதனா மருத்துவமனையின் கண்சிகிச்சைப் பிரிவை அமைப்பதாகக் கூறியே, அரியாலை மத்தியில் உள்ள குறித்த காணி, தனியார் ஒருவரிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. ஆனால் கண் சிகிச்சைப் பிரிவை இங்கு அமைப்பதற்குப் பதிலாக, மருத்துவக் கழிவுகளை இரகசியமான முறையில் கொண்டுவந்து, எரியூட்டும் வேலையையே மருத்துவமனை நிர்வாகம் இதுவரை மேற்கொண்டு வந்தது.

எவ்வித அனுமதிகளுமற்று, சட்டவிரோதமான முறையில் இந்த மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதால் எமது சூழலில் பலவிதமான சுகாதாரப் பிரச்சினைகள் எழுந்துள்ளன. மருத்துவக்கழிவுகளை நாய், பூனை என்பன உணவாக உட்கொள்ள, அவற்றை இழுத்துச் செல்வதால் பெரும் துர்நாற்றம் ஊரெங்கும் பரவி வருகின்றது. எமது பிரதேச இளைஞர் ஒருவரும், குறித்த மருத்துவக்கழிவுகளை எரிக்கும் காணியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டவரும் மர்மமான - இனங்காணப்படாத - நோயால் உயிரிழந்திருந்தனர். இதற்கு இந்தக் காணியில் எரிக்கப்படும் மருத்துவக்கழிவுகளால் உண்டான நச்சுச்சூழலே காரணம் எனப் பலரும் நம்புகின்றனர். இந்த நிலையிலேயே இங்கே இனிமேல் மருத்துவக்கழிவுகளை எரியூட்டக்கூடாது என்று போராடுகின்றோம்"-என்றனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி,

இது கண் சிகிச்சைப் பிரிவுக்கென பெற்றுக்கொள்ளப்பட்ட காணிதான். ஆனால் அந்தக் காணியில் மருத்துவக் கழிவுகள் எரித்து அழிக்கப்படுவதில்லை. அங்கு சில மருத்துவமனைக் கழிவுகள் உலர வைக்கப்பட்ட பின்னர் பிறிதொரு இடத்திலேயே எரித்து அழிக்கப்படுகின்றன. ஆனால் குறித்த காணியில் மருத்துவக் கழிவுகள் எரிக்கப்பட்ட தடயங்கள் உள்ளன. ஏழு நாள்களுக்குள் குறித்த காணிக்குள் இருக்கும் மருத்துவக்கழிவுகள் முற்றாக அகற்றப்படும். மக்களால் கூறப்படும் விடயங்கள் தொடர்பில் ஆராயப்படும்" - என்றார்.

பணிப்பாளரின் உறுதிமொழியை அடுத்து நேற்றிரவு 8.45 மணியளவில் மக்கள் தமது வீதிமறிப்புப் போராட்டத்தை இடைநிறுத்தினர். அதன் பின்னரே ஏ-9 ஊடான போக்குவரத்து சுமுகமானது. (அ-எ-20-26-100)

## ஊடகவியலாளர்களை...

செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களைப் பொலிஸார், அந்தக் காணிக்குள் புகவிடாமல் விரட்டியடித்துள்ளனர். யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி மக்களின் போராட்டம் குறித்து அறிந்து அவ்விடத்துக்கு நேற்றிரவு சென்றார். அப்போது அவர் அந்தக் காணியில் மருத்துவக் கழிவுகள் எரியூட்டப்படுவதில்லை என்று கூறினார். எனினும் அங்கு கழிவுகள் எரியூட்டப்பட்ட தடயங்கள் இருப்பதாகவும், அதைத் தாம் காண்பிப்பதாகவும் மக்கள் அவரை அழைத்துகொண்டு காணிக்குள் சென்றனர். அப்போது அவர்களுடன் ஊடகவியலாளர்களும் உட்செல்ல முயன்றனர்.

அது மருத்துவமனையின் கழிவுகளைப் போடும் காணி என்பதால், மருத்துவமனை நிர்வாகம் அதற்குள் ஊடகவியலாளர்கள் வருவதை விரும்பவில்லை. அதனால் உள்ளே அனுமதிக்கமுடியாது என்று யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் ஊடகவியலாளர்களை விரட்டியடித்தார். (அ-20)

## சஜித்...

உறுப்பினர் மருத்துவர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கட்சித் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை எவ்வாறு மீட்டெடுப்பது என்பது பற்றியே விவாதம் இடம்பெறவுள்ளது. இந்த விவாதத்தில் ஜனாதிபதியும் பங்கு பற்றினாலேயே விவாதம் பூரணத்து வமானதாக இருக்கும் - என்றார். (அ-எ-6)

## ஆய்வறிக்கை...

தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுண்ணக்கல் அகழ்வால் தங்களது பிரதேசம் உவர்நிலமாக மாறும் அபாயம் உள்ளது என்று தெரிவித்து, அந்தப் பகுதி மக்கள் பல மாதங்களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பின்னணியில் பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வு தொழிற்சாலையை ஆரம்பிக்கச் சென்ற கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால் திரும்பிச் சென்றிருந்தார்.

இந்தநிலையில், நேற்று ஊடக சந்திப்பு நடத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்ததாவது:-

பொன்னாவெளியைச் சூழவுள்ள மக்கள் மத்தியில் சில குழப்பங்கள் உள்ளன. மக்கள் சந்திப்பு ஊடாகக் கேள்வி பதில் முறையான கலந்துரையாடலை நடத்தவே அங்கு சென்றோம். அதைத் தடுத்து நிறுத்த சில அரசியல்வாதிகளும், குடிகாரர்களும் குழப்பங்களை ஏற்படுத்தினர்.

என் மீது அவதூறு பரப்பும் செயற்பாட்டில் தமிழ்க் கட்சிகள் செயற்படுகின்றன. சேறுபூசல்கள் மூலம் என்னைத் துரத்த முடியும் என்று சிலர் நினைக்கின்றார்கள். பிரபாகரனாலேயே என்னைத் துரத்த முடியவில்லை, சில குடிகாரர்களால் என்னைத் துரத்தமுடியாது. பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வு நீண்ட காலத்துக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்ட திட்டம். 2013ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் காலப் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட இந்தத் திட்டம் உள்ளது.

சுண்ணக்கல் அகழ்வுக்கான அனுமதி வழங்குவதற்கான படிமுறைகள் உண்டு. அவற்றின் ஒரு கட்டமாக ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. சுண்ணக்கல் அகழ்வு சாதக, பாதகம் தொடர்பான ஆய்வு நடவடிக்கைக்காக 12 திணைக்களங்களைச் சேர்ந்தவர்களுடன் சென்றபோது குழப்பம் ஏற்படுத்தப்பட்டது.

சுண்ணக்கல் அகழ்வால் மக்களுக்குப் பாதிப்பு என்று ஆய்வறிக்கை கிடைத்தால் அகழ்வுப் பணிகளுக்கு [illegible] கப்படாது. பாதிப்பில்லை என்று அறிக்கை கிடைத்தால் அசுர வேகத்தில் அகழ்வு நடவடிக்கைக்கான பணிகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ-எ-20)

## காணிகளை...

நேற்று வியாழக்கிழமை அவர்கள் வடக்கு ஆளுநரை அவரது அலுவலகத்தில் சந்தித்தனர். அந்தச் சந்திப்பிலேயே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர். (அ-எ-66)

## நீர்...

உயிரிழந்தவராவார். கூலி வேலை செய்யும் இவர், வேலை முடிந்து வரும்போது குட்டைக்குள் வீழ்ந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

நீர் நிரம்பிய குட்டைக்கு அருகே சைக்கிள் ஒன்று காணப்பட்டதை அடுத்து, வீதியால் சென்றவர்கள் குட்டையை ஆராய்ந்துள்ளனர். அப்போது குட்டைக்குள் சடலம் காணப்பட்டதை அடுத்து, பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. சடலம் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-எ-19)

## விபத்தில்...

சேர்ந்த கனகராசா நிமலன் (வயது-41) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்த விபத்து கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர், வீதியால் திரும்ப முற்பட்ட போது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து நடந்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இவர் மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். நேற்று அவர் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

அதேவேளை, இந்த விபத்தில் சிக்கிய மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தார். (அ-எ-26)

## மன்னாரில்...

பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-56)

## கிணற்றில்...

துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த நாகராசா திருமங்களநாயகி (வயது-75) என்பவரே உயிரிழந்தவராவார்.

இரவு படுக்கைக்குச் சென்ற இவரை காலையில் படுக்கையில் காணாததால் தேடியபோது அவர் கிணற்றில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத்தொழிலாளர்களின் வேதன உயர்வு எட்டாக்கனி!

## பொருளியல்துறை நிபுணர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 12

பெருந்தோட்டத் தேயிலைத் [illegible] ளர்களின் வேதன அதிகரி[illegible] தோட்டத் தொழிலாளர்களி[illegible] நிர்ணயசபை தொழில் ஆணையாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் வேதன அதிகரிப்பு தொடர்பான வாக்கெடுப்பை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த சந்திப்பை முதலாளிமார் சம்மேளனம் புறக்கணித்திருந்ததால் வேதன அதிகரிப்புத் தொடர்பான பிரதான கலந்துரையாடல் 14 நாள்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச-இ)


## சனல் ஆடுகள் விற்பனைக்கு

- இடம் : வட்டுக்கோட்டை தென்மேற்கு
- கடாய் : 02 x 95 000/=
- கடாய் : 01 x 70 000/=
- மறி ஆடு 01 கடாய் 01 மறி } 95 000/=

தொடர்பு:- 076 234 6416

(CS/54704) J-1

## மாபெரும் சேல்

புதுவருடத்தை முன்னிட்டு ஏசியன் தளபாடத்தின் மாபெரும் சேல் வெள்ளி, சனி ஆகிய தினங்களில் நடைபெறும்.

**இல-230, 114 நாவலர் வீதி யாழ்ப்பாணம்.**

தொடர்புகளுக்கு:
021 222 7892, 077 728 6904

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள **ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (புத்தகசாலை)** மற்றும் **சமுத்திரா ரேடர்ஸ் (Hardware)** ஆகிய நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு.

**ஆண், பெண் இருபாலாரும்** விண்ணப்பிக்கலாம்.

077 494 9683, 077 077 6469

(CS/54695) J-1

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 19 • 05 • 1930



மறைவு 17 • 03 • 2024

### அமரர் லோகேஸ்வரி செல்லத்தம்பி
**(நாரந்தனை, மானிப்பாய்)**

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை நல்வழி நடாத்திய எங்கள் குடும்பத்தலைவி அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டதும் உடன் வந்து உதவி செய்ததோடு, மரணச் சடங்கிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை பத்திரிகைகள், பிரசுரங்கள் மற்றும் பதாகைகள் மூலம் வழங்கியவர்களுக்கும்,தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்களின் ஊடாக அனுதாப செய்திகளை பகிர்ந்தவர்களுக்கும் மலர்வளையங்கள் சாத்தியும் மலர்மாலைகள் அணிவித்தும் நேரில் கலந்து பிரார்த்தனை செய்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிய உள்ளங்கள் அனைவருக்கும் எமது அன்பார்ந்த நன்றிகளை மனமுவந்து இத்தால் நவில்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (13.04.2024) சனிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் திங்கட்கிழமை 15.04.2024 மு.ப 08.30 மணிமுதல் 11.30 மணிவரை அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சுதுமலைச்சந்தியடி,**
**நாவலடி வீதி,**
**மானிப்பாய்.**

(CS/54698) J-1

**குடும்பத்தினர்**

## A/L தொழினுட்பப்பிரிவு

Techna Technical institute
Smart thinking leads to innovate

**A/L 2024 DAY CLASS ஆரம்பம்**

17.04.2024 புதன்கிழமை, மாலை 3.30 மணிக்கு

| | |
|---|---|
| உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் | - M.விஷ்ணு, P.நிரோஜனன் |
| பொறியியல் தொழினுட்பவியல் | - S.மயூரதன் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - S.சக்தி |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்(ICT) | - T.லவன் |
| விவசாய விஞ்ஞானம் | - S.சஜீபன் |
| கணிதம் 07 | - T.சசிகரன் |
| புவியியல் | - S.P.கரன் |

A/L 2025, 2024 பிரிவுகள் நடைபெறுகின்றன.

2025 பிரிவினருக்கான BSTவகுப்புக்கள் **இலவசமாக** நடைபெறுகின்றன

077 170 3549

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் செல்வமஹால் திருமண மண்டபத்திற்கு அருகில் பலாலி வீதியில் 18 அடி பாதையுடன் 7 1/2 பரப்புக் காணி **விற்பனைக்கு உண்டு.**

077 229 4985, 077 621 2039

(CS/24021)

## தவறவிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் தபாலகம், காக்கை தீவு மீன்சந்தை, K.K.S Road வீதியூடாக பலாலி வீதி கோண்டாவில் சந்திக்கும் கல்வியங்காடு (GPS) விளையாட்டரங்கிற்கும் இடையில் **மோட்டார் சைக்கிள் முன்பக்க இலக்கத்தகடு (NP MF 1846) தவறவிடப்பட்டுள்ளது.**

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும்.

077 663 6384, 021 222 1764

(CS/547031) J-1

## சிறிராம் ஜுவல்லர்ஸ்

* யாழ். நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எதிர்வரும் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடியினை வழங்கவுள்ளோம்.
* 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 16.04.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக் கழிவில் வழங்கப்படும்.
* அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதி செய்து தரச்சான்றும் வழங்கப்படும்.

**இல. 158, 193**
**கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

077 165 1729, 07777 305 67, 021 222 8334

(CR 42200)V-1







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.